இந்தியாவிலேயே முதல்முறையாக

# பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட 2 பேருக்கு ரத்தக்குழாய் அடைப்பு நீக்கம்

## அதிநவீன சிகிச்சை செய்து மியாட் மருத்துவமனை சாதனை



மூளையில் ரத்தக்குழாய் அடைப்புக்கு நவீன சிகிச்சை பெற்று குணமடைந்த கலாவதி, சீனுவாசராவுடன் மியாட் மருத்துவமனை நிறுவனர் டாக்டர் மோகன்தாஸ், மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், கதிரியக்கவியல் துறை தலைமை டாக்டர் முரளி, டாக்டர் கிருஷ்ணன் பாலகோபால்.

சென்னை, நவ.7: மூளையில் ஏற்பட்ட ரத்தக்குழாய் அடைப்பு காரணமாக பாதிக்கப்பட்ட 2 பேருக்கு மெக்கானிக்கல் த்ராம்பெக்டமி என்ற அதிநவீன சிகிச்சை மூலம் அடைப்பை நீக்கி மியாட் மருத்துவமனை சாதனை படைத்துள்ளது.

இந்தியாவில் ஆண்டுக்கு 1.6 மில்லியன் மக்கள் பக்கவாதத்தால் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோய் யாருக்கும் எந்த நேரத்திலும் ஏற்படலாம். பக்கவாதத்தின் போது ரத்தக்குழாய்களில் ஏற்படும் ஒரு ரத்த உறைவுதான் மூளையில் முக்கிய மையங்களுக்கு ரத்தம் செல்லாதவாறு தடுத்துவிடுகிறது.

இதனால் மூளையின் செயல்பாடு மங்கிவிடும். அதனால் காது கேட்கவும், வாய் பேசவும், நினைவில் வைத்திருக்கவும், ஒரு இடத்தில் இருந்து நகரவும் முடியாத நிலை ஏற்படும். நரம்பு அடைப்பு காரணமாக மூளைக்கு ஆக்ஸிஜன் செல்லாது. உடலின் ஒரு பகுதி செயல் இழந்துவிடும். பாதிக்கப்பட்ட நபருக்கு 6 மணி நேரத்திற்குள் உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றால் நிரந்தரமாக உடல் உறுப்பு செயல் இழந்து மற்றவர்களை சார்ந்து வாழும் நிலை ஏற்படும். சிறிய அடைப்பு என்றால் ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள மருந்தை ஊசி மூலம் செலுத்தி குணப்படுத்தி விடலாம். ஆனால், பெரிய மூளை ரத்தக்குழாய் அடைப்பை ஊசி மூலம் சரிசெய்ய முடியாது.

எனவே, மெக்கானிக்கல் த்ராம்பக்டமி என்ற நவீன சிகிச்சை மூலம் மியாட் மருத்துவமனையில் டாக்டர்கள் சரிசெய்துள்ளனர். இதேபோல் கடந்த 6 மாதங்களில் 14 பேருக்கு இந்த மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே முதல்முறையாக இங்கு செய்யப்படுகிறது.

இதுகுறித்து மியாட் மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் மோகன்தாஸ் நிருபர்களிடம் கூறியதாவது:

ஸ்ட்ரோக் எனும் பக்கவாத நோய் மிகவும் கொடிய நோய். இந்தியாவில் ஒரு லட்சம் பேரில் 73 பேர் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். நோய் பாதித்த உடன் ஒரு நிமிடத்திற்கு 1.9 மில்லியன் மூளை நரம்பு செல்கள் இறக்கின்றன. இதனால் உடல் உறுப்புகள் படிப்படியாக செயல் இழந்துவிடும். இந்த நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரை குறைந்தது 3 முதல் 6 மணி நேரத்திற்குள் அதிநவீன வசதிகளுடன் குணப்படுத்தும் மருத்துவமனைகளுக்கு கொண்டு சென்றால் உடல் உறுப்பு பாதிப்பினை கட்டுப்படுத்தவோ அல்லது குறைக்கவோ முடியும். இல்லையென்றால் உடல் பாதிப்பை கட்டுப்படுத்த முடியாது.

பெரிய ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்பட்டு இருந்தால் நீக்குவது சிக்கலானது. எனவே, இது போன்ற அடைப்புகளை மெக்கானிக்கல் த்ராம்பெக்டமி எனப்படும் அதிநவீன சிகிச்சை முறை மூலம் காலில் உள்ள நரம்பு குழாய் வழியாக மூளைக்கு குழாய் செலுத்தி ரத்த குழாய் அடைப்பு சரிசெய்யப்படுகிறது. இதனால் நோயாளிகள் பக்கவாதத்தால் இழந்தவற்றை சில மணி நேரங்களிலேயே திரும்ப பெற முடியும்.

இதுபோல் பாதிக்கப்பட்ட சென்னை மணப்பாக்கத்தை சேர்ந்த கலாவதி (43), ராமாபுரம் சீனுவாசராவ் (44) ஆகியோர் பாதிக்கப்பட்ட 2 மணி நேரத்தில் எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று 5 நாட்களிலேயே இயல்பான நிலையில் எழுந்து நடக்கவும், பேசவும் செய்கின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நரம்பியல் துறை தலைவர் மருத்துவர் கிருஷ்ணன் பாலகோபால், கதிரியக்கவியல் துறை தலைவர் மருத்துவர் முரளி ஆகியோர் உடனிருந்தனர்.